செய்தி வெளியீடு எண்:445 17.07.2007

# <u>ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் ரூ.286 கோடிக்கு பரிந்துரை</u>

## <u>மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தகவல்</u>

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்டத்தின் மாநில அளவிலான 4–வது ஒப்பளிப்பு கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று (17.7.2007) காலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் ரூ. 286 கோடி மதிப்பீட்டிலான இரண்டு திட்டங்கள் மத்திய அரசுக்கு பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.

## மதுரை மாநகர் திட்டங்கள்

### 1) <u>பாதாளச் சாக்கடைத் திட்டம்</u>

பாதாளச் சாக்கடைத் திட்டம் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 50 வார்டுகளுக்கு முழுமையாகவும் 22 வார்டுகளுக்கு பகுதியாகவும் நிறைவேற்றப்படுகிறது. மேற்படி திட்டத்தில் விடுபட்டுள்ள 22 வார்டுகளுக்கு முழுமையாக பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கவும், நவீன முறையில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும், மற்றும் பழைய திட்டத்தை மேம்படுத்தவும் ரூ. 231.01 கோடிக்கு செயல்படுத்தவும் திட்டம் பரிந்துரைக்கப்பட்டது.

**2) சென்ட்ரல் மார்க்கட் மாற்றியமைத்தல்**

மதுரை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள மத்திய காய்கறி அங்காடியை மாட்டுத் தாவணி பஸ் நிலையம் அருகில் நவீன முறையில் அமைக்க ரூ. 55.00 கோடியில் செயல்படுத்த உள்ள திட்டத்தை பரிந்துரை செய்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் நிதித்துறை செயலாளர் திரு ஞானதேசிகன் இ.ஆ.ப, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசுச் செயலர் திரு. தீனபந்து இ.ஆ.ப., டுபிட்கோ நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. கௌரிசங்கர் இஆ.ப, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயலர் திரு சமீர் வியாஸ்இ.ஆ.ப, வீட்டு வசதித்துறை செயலாளர் திரு கு.செல்லமுத்து இ.ஆ.ப, நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர். நிரஞ்சன் மார்டி இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய நிர்வாக இயக்குநர் திரு டி.கே.ராமச்சந்திரன் இ.ஆ.ப., பேரூராட்சிகள் துறை இயக்குநர் டாக்டர் கோபால் இ.ஆ.ப, நகராட்சி நிர்வாக இணை ஆணையர் திரு மக்வானா இ.ஆ.ப., சென்னைக்குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இய்குநர் திரு சிவதாஸ் மீனா இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு சுவரன்சிங் இ.ஆ.ப., மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

********

**செய்தி : வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**